4

# "நல்ல துக்கம்!"

## (2:11-22)

எங்களது இளைய மகன் மத்தேயு ஒரு சிறு குழந்தையாக இருந்தபோது, நாங்கள் அர்க்கன்சாஸ் மாநிலக் கண்காட்சிக்குச் சென்றிருந்தோம். மற்ற ஒவ்வொருவரும் அங்கு வரும்படி முடிவுசெய்த நாளை நாங்களும் தேர்ந்துகொண்டோம் என்பது உறுதி. கண்காட்சிசாலையில் நாங்கள் நடப்பதே கடினமாக இருக்கும் அளவுக்கு கண்காட்சி மைதானம் முழுவதும் கூட்டம் நிறைந்திருந்தது. மத்தேயு கூட்டத்தில் தொலைந்து போய் விடாதபடிக்கு அவனை எங்களுக்கு அருகில் வைத்துக்கொள்ளுவதில் ஜாக்கிரதையாய் இருந்தோம் என்று நாங்கள் நினைத்தோம், ஆனால் அவனது இளம் கண்களும் வினோதப்பிரியம் கொண்ட சிந்தையும் அங்கிருந்த, எங்களை ஈர்க்காத கவர்ச்சியான பொருட்களினால் ஈர்க்கப்பட்டன. அவன் ஒரு காட்சிசாலையில் நின்றுவிட்டான், நாங்களோ தொடர்ந்து நடந்துகொண்டிருந்தோம்.

அவன் எங்களுடன் இல்லை என்பதை நாங்கள் கண்டறிந்தபோது, நாங்கள் பித்துப்பிடித்தவர்களாய் ஆனோம். நாங்கள் வந்த வழியே திரும்பிச்சென்று, கூட்டத்தில் அவன் இருக்கின்றானா என்று பார்த்துக்கொண்டு அவனது பெயரை உரக்கக் கூவியழைத்தோம், மற்றும் கருவண்ண முடிகொண்ட சிறுபையன் ஒருவனை கண்டீர்களா என்று கூட்டத்தாரைக் கேட்டுக் கொண்டிருந்தோம். பெற்றோரிடமிருந்து பிரிந்திருந்த அவ்வேளையில் அவன் எவ்வாறு துடிப்பான் என்பதைப் பற்றி நாங்கள் நினைக்கையில் கண்ணீரை அடக்கிவைத்தல் என்பது எங்களால் இயலாததாக இருந்தது.

ஒருசில நிமிடங்களுக்குப் பின்பு, எனது மனைவியின் சகோதரி, கூட்டத்தைப் பிளந்துகொண்டு எங்களை நோக்கி வருவதை நாங்கள் கண்டோம். அவள் மத்தேயுவைத் தன்னுடன் கூட்டிக்கொண்டுவந்தாள். அவன் தான் காணாமல் போயிருந்ததைக்கூட அறியாதவனாக இருந்தான்! அவனது சித்தி அவன் காட்சிசாலையில், மின்னனு விளையாட்டுப் பொருட்களை விரிந்த கண்களுடன் பார்த்துக்கொண்டு இருந்தபோதே அவனைக் கண்டிருந்தாள். நாங்கள் அங்கில்லாததை அவன் கடைசியில் கண்டபோது, அவன் "நீங்கள் என் தந்தையையும் தாயையும் பார்த்தீர்களா?" என்று கேட்டிருக்கின்றான். அவனது கையைப் பிடித்துக் கொண்டபடியே அவள் எங்களைத் தேடியிருக்கின்றாள். உண்மையில் நாங்கள்தான் காணாமற்போயிருந்தோம்!

இது உலகில் பலருக்கு இன்றைய நாட்களில் எவ்வளவாய் உண்மையாக உள்ளது: அவர்கள் காணாமற்போயிருக்கின்றனர் மற்றும்

*அதை அறியாதிருக்கின்றனர்! தேவனிடமிருந்து தொலைந்துபோய், மோசம்போகுதலின் கடலில் உள்ள நிலையில், அவர்கள் தங்கள் சூழலானது தாங்கள் இல்லத்தில் இருப்பதுபோல் அவர்களுக்குப் பழக்கமாகும் அளவுக்கு அதை அனுமதித்துள்ளனர். அவர்கள் அபாயத்தைக் காண்ப தில்லை. அவர்கள் இழந்துபோகப்பட்டிருப்பதை உணராதவர்களாய் இருக்கின்றனர்.*

*நமது உலகமானது கீழே தடுமாறி விழுந்தபின்பு மாத்திரமே இழந்துபோகப் பட்டிருத்தலின் உணர்வு வரலாம். பின்பு நம்மையே இழந்துபோயிருத்தலை உணர்ந்தறிதல் என்பதைவிட சிலவற்றை இழந்துபோயிருத்தல் என்பதை உணர்ந்தறிதல் அதிகமானதாக இருக்கலாம். ஆவிக்குரிய கருத்தில், இழந்துபோகப்பட்டிருத்தல் என்பது தேவனிடத்தில் இருந்து பிரிந்திருத்தல் என்பதாக உள்ளது. மக்கள் தேவனிடத்திலிருந்து நீண்டதூரம் பிரிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் தங்கள் சொந்த தேவர்களை உண்டாக்கிக்கொண்டு அவர்களுடன் இல்லத்தில் இருத்தல் என்பது சரியானதே என்று உணருகின்றனர், அவர்கள் தேவனிடத்திலிருந்து இழந்துபோகப்பட்டிருப்பதை உணர்ந்து கொள்வதில்லை, ஏனெனில் அவர்கள் தேவன் யார் என்று உணர்ந்தறிவதில்லை. அவர்கள் அறிந்துள்ள, தாங்கள் உண்டாக்கின தேவர்களிடம் இருந்து இழந்துபோகப் பட்டிருப்பதில்லை. மாறாக, அவர்கள் தங்களைப் படைத்த, அவர்களின் இழந்துபோகப்பட்ட நிலையில் கூட அவர்களை நிலை நிறுத்துகின்ற தேவனிடம் இருந்து இழந்துபோகப்பட்டுள்ளனர்.*

*யூதா தேவனிடமிருந்து இழந்துபோகப்பட்டிருந்ததோடு, அவர்களின் உலகம் கீழாகத் தாழ்த்தப்பட்டு இருந்தது என்பதை எரேமியா அறிந் திருந்தார். அது அவரது உலகமாகவும் இருந்தது. நடக்கவிருந்தது என்ன என்பதை அறிந்திருந்ததானது அவர் கண்ட விஷயத்திற்கு அவரைத் தயாராக்கி இருந்ததில்லை. எருசலேமின் அழிவானது யூதாவுக்குச் செய்திருந்தது போலவே அவருக்கும் கசப்பான கண்ணீரைக் கொண்டு வந்தது. இருப்பினும், எரேமியாவின் கண்ணீர் வீணானதாக இருந்ததில்லை. அவர், சிலவேளைகளில் நாம் கண்ணீரின் மூலமாக சத்தியத்தை இன்னும் சிறப்பாகக் காணமுடியும் என்பதை நாம் புரிந்துகொள்ள உதவுகின்றார். இந்த சத்தியங்களை நாம் முதலில் அவரது கண்ணீர் மூலமாகவும் பின்பு மக்களின் கண்ணீர் மூலமாகவும் கண்ணோக்குவோம்.*

## எரேமியாவின் பரிவிரக்கம்

*என் ஜனமாகிய குமாரத்தியின் நொறுங்குதலினிமித்தம் கண்ணீர் சொரிகிறதினால் என் கண்கள் பூத்துப்போகிறது; என் குடல்கள் கொதிக்கிறது; என் ஈரல் இளகித் தரையிலே வடிகிறது; குழந்தைகளும் பாலகரும் நகரத்தின் வீதிகளிலே மூர்ச்சித்துக்கிடக்கிறார்கள். அவைகள் குத்துண்டவர்களைப்போல நகரத்தின் வீதிகளிலே மூர்ச்சித்துக் கிடக்கும்போதும், தங்கள் தாய்களின் மடியிலே தங்கள்*

> *பிராணனை விடும்போதும், தங்கள் தாய்களை நோக்கி: தானியமும் திராட்சரசமும் எங்கே என்கிறார்கள். எருசலேம் குமாரத்தியே, நான் உனக்குச் சாட்சியாக என்னத்தைச் சொல்லுவேன்? உன்னை எதற்கு ஒப்பிடுவேன்? சீயோன் குமாரத்தியாகிய கன்னிகையே, நான் உன்னைத் தேற்றும்படிக்கு உன்னை எதற்கு நிகர்சொல்லுவேன்? உன் காயம் சமுத்திரத்தைப்போல் பெரிதாயிருக்கிறதே, உன்னைக் குணமாக்குகிறவன் யார்? உன் தீர்க்கதரிசிகள் அபத்தமும் வியர்த்தமுமான தரிசனங்களை உனக்காகத் தரிசித்தார்கள்; அவர்கள் உன் சிறையிருப்பை விலக்கும்படி உன் அக்கிரமத்தை எடுத்துக் காட்டாமல், அபத்தமானவைகளையும் கேடானவைகளையும் உனக்காகத் தரிசித்தார்கள். வழிப்போக்கர் யாவரும் உன் பேரில் கை கொட்டுகிறார்கள்; எருசலேம் குமாரத்தியின் பேரில் ஈசற்போட்டு தங்கள் தலைகளைத் துலுக்கி: பூரண வடிவும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமான நகரம் இதுதானா என்கிறார்கள். உன் பகைஞர் எல்லாரும் உன்பேரில் தங்கள் வாயைத் திறக்கிறார்கள்; ஈசற்போட்டுப் பற்கடிக்கிறார்கள்; அதை விழுங்கினோம், நாம் காத்திருந்த நாள் இதுவே, இப்பொழுது நமக்குக் கிடைத்தது, அதைக் கண்டோம் என்கிறார்கள். கர்த்தர் தாம் நினைத்ததைச் செய்தார்; பூர்வநாட்கள் முதற்கொண்டு தாம் கட்டளையிட்ட தமது வார்த்தையை நிறைவேற்றினார்; அவர் தப்பவிடாமல் நிர்மூலமாக்கி, உன்மேல் பகைஞன் சந்தோஷிக்கும்படி செய்தார், உன் சத்துருக்களின் கொம்பை உயர்த்தினார் (2:11-17).*

*உலகத்தின் மதிப்பீட்டு முறைமையானது, பலம் வாய்ந்த மனிதர்கள் அழுவதில்லை என்று நமக்குக் கூறுகிறது. அழுதல் என்பது பலவீனத்தின் அடையாளமாகவே அடிக்கடி காணப்படுகிறது. உலகம் முழுவதிலும் ''அழுகின்ற குழந்தைகளை'' பழித்துரைக்கும்படியாகப் பள்ளி வளாகங்களில் பையன்கள் கற்றுக் கொள்கின்றனர். எரேமியா அப்படிப் பட்ட பள்ளிகளில் இருந்ததில்லை. அவர் ஒரு மென்மையான இருதயம் கொண்டிருந்தார். அவர் பரிவிரக்கம் உள்ளவராகவும் பரிதாபம் கொள்ப வராகவும் இருந்தார். அவரது கண்ணீர் தமது சொந்த இழப்புக்கான துக்கம் என்பதைக் காட்டிலும் அதிகமாகத் தமது மக்களுக்காகத் தம் பரிதாபத்தை ஊற்றுதல் என்பதாக இருந்தது. அவர் தமது கண்கள் இனியும் கண்ணீரை உண்டாக்கத் தவறும் அளவுக்கு அவர் அதிகமாக அழுதிருந்தார். அவரது இருதயமானது, அவரது உள்ளான பகுதிகள் தரையில் ஊற்றப்படும் அளவுக்குக் கலங்கியிருந்தது. அழுவதற்கு அவரிடம் நிறைய விஷயங்கள் இருந்தன.*

*குழந்தைகள் பசியினால் தெருக்களில் மயங்கி விழுந்தன. உண்பதற்கோ அல்லது குடிப்பதற்கோ எதையேனும் தரும்படி சிறுகுழந்தை கதறிக் கெஞ்சியும் அதை அளிக்க இயலாதிருந்த தாயின் வேதனையை உங்களால் கற்பனை செய்ய இயலுமா? குழந்தைகள் பட்டினியால் தங்கள் தாய்மார்களின் கரங்களில் இருக்கையிலேயே இறந்துபோயின (2:11, 12).*

*அவர்களின் அழிவு கடலைப்போல் பரந்ததாக இருந்தது, எவரொருவராலும் அவர்களைச் சுகமாக்க இயலாதிருந்தது. அவர்களின்*

*அழிவை விவரிப்பதற்குச் சரியான வார்த்தைகளைக் கண்டறிவதில் எரேமியா (யாவற்றையும்) இழந்திருந்தார். அவரால் ஒப்பீடு எதையும் நினைத்துப் பார்க்க இயலவில்லை. அவர் அதைப்போன்ற எதையும் கண்டிருந்ததில்லை (2:13).*

*அவர்களின் தீர்க்கதரிசிகள் பொய் பேசியிருந்தனர். அவர்கள் பொய்யான மற்றும் வஞ்சனையான தரிசனங்களின் கீழ் சத்தியத்தை ஒளித்து இருந்தனர். (எரே. 14:13-15ஐக் காணவும்.) தீர்க்கதரிசிகள் மக்களின் பாவம் நிறைந்த தன்மையைச் சுட்டிக்காட்டத் தவறி, இனிமையான மாயக்கருத்துக்களைத் தொடருணவாக அளித்திருந்தனர் (2:14).*

*அவர்களுக்கு நேர்ந்திருந்ததைக் கடந்துசென்ற மற்ற நாடுகளின் மக்கள் கண்டு கைகொட்டி அவர்களை ஏளனம் செய்து, "பூரணவடிவம் சர்வபூமியின் மகிழ்ச்சியுமான நகரம் இதுதானா?" என்றார்கள். ஏளனம் செய்பவர்கள் காணும்படிக் காத்திருந்த நாள் வந்திருந்தது. எருசலேம் வீழ்ந்திருந்தது (2:15, 16)!*

*தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்றியிருந்தார், மற்றும் அவர் அதை இரக்கம் எதுவுமின்றிச் செய்திருந்தார். அவர் கீழ்ப்படியாமைக்கு நீண்டகாலத்திற்குமுன் கொடுத்திருந்த தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியிருந்தார் (2:17). மோசேயின் நாட்களில் இருந்தே நியாயப்பிரமாணமானது பின்வருமாறு கூறியிருந்தது:*

> *"நீங்கள் எனக்குச் செவிகொடாமலும், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றின்படி செய்யாமலும், என் கட்டளைகளை வெறுத்து, உங்கள் ஆத்துமா என் நியாயங்களை அரோசித்து, என் கற்பனைகள் எல்லாவற்றின்படியும் செய்யாதபடிக்கு, என் உடன்படிக்கையை நீங்கள் மீறிப்போடுவீர்களாகில்: நான் உங்களுக்குச் செய்வது என்னவென்றால், கண்களைப் பூத்துப்போகப்பண்ணுகிறதற்கும், இருதயத்தைத் துயரப்படுத்துகிறதற்கும், திகிலையும் ஈளையையும் காய்ச்சலையும் உங்களுக்கு வரப்பண்ணுவேன்; நீங்கள் விதைக்கும் விதை விருதாவாயிருக்கும், உங்கள் சத்துருக்கள் அதின் பலனைத் தின்பார்கள். நான் உங்களுக்கு விரோதமாக என் முகத்தைத் திருப்புவேன்; உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படுவீர்கள்; உங்கள் பகைஞர் உங்களை ஆளுவார்கள்; துரத்துவார் இல்லாதிருந்தும் ஓடுவீர்கள்" (லேவி. 26:14 -17).*

> *"உன் சத்துருக்களுக்கு முன்பாக நீ முறிய அடிக்கப்படும்படி கர்த்தர் செய்வார்; ஒரு வழியாய் அவர்களுக்கு எதிராகப் புறப்படுவாய், ஏழு வழியாய் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போவாய்; நீ பூமியிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் சிதறுண்டுபோவாய். உன் பிணம் ஆகாயத்துப் பறவைகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகும்; அவைகளை விரட்டுவாரில்லாதிருப்பார்கள்" (உபா. 28:25, 26).*

> *"சகலமும் பரிபூரணமாயிருக்கையில், நீ மனமகிழ்ச்சியோடும் களிப்போடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவியாமற் போன தினிமித்தம், சகலமும் குறைவுபட்டு, பட்டினியோடும் தாகத்தோடும்*

*நிர்வாணத்தோடும், கர்த்தர் உனக்கு விரோதமாய் அனுப்பும் சத்துருக்களைச் சேவிப்பாய்; அவர்கள் உன்னை அழித்துத் தீருமட்டும், இருப்பு நுகத்தடியை உன் கழுத்தின்மேல் போடுவார்கள்" (உபா. 28:47, 48).*

*யூதேயாவைச் சேர்ந்தவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யாதிருந்தபடியால், அவர்கள் தங்கள் விரோதிகளுக்கு ஊழியம் செய்வார்கள்.*

## எரேமியாவின் புத்திமதி

*கீழ்ப்படியாதவர்கள் தண்டிக்கப்பட்டு இருந்தபடியால் தேவன் மக்களின் கண்ணீருக்கு இப்போது பரிவிரக்கம் உடையவராயிருப்பார் என்று எரேமியா நினைத்தார். அந்தத் தீர்க்கதரிசி அவர்களை அழுது ஜெபிக்கும்படி கூறினார்:*

*... "சீயோன் குமாரத்தியின் மதிலே, இரவும் பகலும் நதியவ்வளவு கண்ணீர் விடு, ஓய்ந்திராதே, உன் கண்ணின் கறுப்புவிழி சும்மாயிருக்கவொட்டாதே. எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்தில் கூப்பிடு; ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு; எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப்போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு" (2:18, 19).*

*துக்கித்து அழுதல் என்பது அவர்களுக்கு நடந்திருந்தவைகளினால் மாத்திரமல்ல ஆனால் அவர்களுக்கு அழிவைக் கொண்டு வந்த அவர்களின் பாவம் நிறைந்த தன்மையினாலும் ஏற்புடையதாக இருந்தது. இரவு வேளையின்போது அவர்கள் ஒவ்வொரு மூன்றாம் மணிவேளையிலும் (ஒவ்வொரு நாழிகையின் தொடக்கத்திலும்) எழுந்திருந்து தங்கள் இருதயங்களைக் ஆண்டவரின் சமுகத்தில் தண்ணீரைப்போல் ஊற்ற வேண்டும் என்று எரேமியா அவர்களுக்குக் கூறினார். "ஆண்டவரின் சமுகத்தில்" (வச. 19) என்பது தேவனுடன் அவர்களுக்குப் பழக்க மற்றிருந்ததான தைரியமான உறுதிப்பாட்டைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. இச்சொற்றொடரானது தேவனுடைய சமுகத்தை நாடவேண்டியதன் அவசியத்தையும் நொறுங்குண்ட ஆவியுடன் அவரை அணுகவேண்டியதன் அவசியத்தையும் கூடக் கருத்தாகத் தெரிவிக்கிறது. இதே தேவையைத் தாவீதும் வெளிப்படுத்தினார்:*

*கர்த்தாவே, நான் கூப்பிடுகிற சத்தத்தை நீர் கேட்டு,எனக்கு இரங்கி, எனக்கு உத்தரவு அருளிச்செய்யும். என் முகத்தைத் தேடுங்கள் என்று சொன்னீரே, உம்முடைய முகத்தையே தேடுவேன் கர்த்தாவே, என்று என் இருதயம் உம்மிடத்தில் சொல்லிற்று. உமது முகத்தை எனக்கு மறையாதேயும்; நீர் கோபத்துடன் உமது அடியேனை விலக்கிப்போடாதேயும், நீரே எனக்குச் சகாயர்; என் இரட்சிப்பின் தேவனே, என்னை நெகிழவிடாமலும் என்னைக் கைவிடாமலும் இரும் (சங். 27:7 -9).*

யூதா ஜனங்கள் யாவரும் தெருக்களில் மயங்கி விழுந்த தங்கள் பிள்ளைகளின் நிமித்தம் தங்கள் கரங்களைத் தேவனிடத்திற்கு உயர்த்த வேண்டும் என்று எரேமியா ஆலோசனை தெரிவித்தார். உதவியற்ற, ஒன்றுமறியாத பிள்ளைகளின் தேவையில் அவர்களை ஆதரிக்க வேறு எந்த செயலும் தீவிரித்து வர இயலாது. மக்களை தேவனிடத்திற்குத் திரும்பவும் அவர்கள் செய்தது குறித்து மனந்திரும்பவும் செய்யக்கூடியது ஏதேனும் இருக்குமென்றால், அது அவர்களின் பிள்ளைகளுடைய நலனாகவே இருக்கும். சிலவேளைகளில் தேவன் பெற்றோர்களை அவர்களின் பிள்ளைகளினுடைய இருதயங்களின் மூலமாக அணுகுகிறார்.

## எரேமியாவின் ஜெபம்

அடுத்து எரேமியா தேவன் செய்திருந்தது குறித்துக் கவனத்தை ஈர்த்து, ஜெபித்தார். தேவன் தாம் செய்திருந்தது பற்றி முழுமையாக அறிந்திருந்தார், மற்றும் அவரது செயல்களின் நியாயத்தைப் பற்றி எரேமியா கேள்வி எதுவும் கேட்கவில்லை. அவர் ஏற்கனவே தேவனுடைய நியாயத்தீர்ப்பின் நீதியை ஒப்புக்கொண்டிருந்தார் (1:18). எரேமியா தமது ஜெபத்தில், தேவனுடைய கோபத்தினால் யூதாவிற்குக் கொண்டுவரப்பட்டிருந்த பல்வேறு துன்பங்களை விவரித்தார்:

> கர்த்தாவே, யாருக்கு இந்தப்பிரகாரமாகச் செய்தீரென்று நோக்கிப்பாரும்; ஸ்திரீகள் கைக்குழந்தைகளாகிய தங்கள் கர்ப்பக் கனியைத் தின்னவேண்டுமோ? ஆண்டவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் ஆசாரியனும் தீர்க்கதரிசியும் கொலைசெய்யப்பட வேண்டுமோ? இளைஞனும் முதிர்வயதுள்ளவனும் தெருக்களில் தரையிலே கிடக்கிறார்கள்; என் கன்னிகைகளும் என் வாலிபரும் பட்டயத்தால் விழுந்தார்கள், உமது கோபத்தின் நாளிலே வெட்டி, அவர்களைத் தப்பவிடாமல் கொன்றுபோட்டீர். பண்டிகைநாளில் கும்புகளை வர வழைப்பது போல சுற்றிலுமிருந்து எனக்குத் திகில்களை வர வழைத்தீர்; கர்த்தருடைய கோபத்தின் நாளிலே தப்பினவனும் மீதியானவனுமில்லை; நான் கைகளில் ஏந்தி வளர்த்தவர்களை என் பகைஞன் நாசம்பண்ணினான் (2:20-22).

இரக்கம் என்ற தேவனின் உணர்வுக்கு வேண்டுகோள் விடுத்த எரேமியா, அவர் (தேவன்) செய்திருந்தவற்றை மீண்டும் கண்ணோக்கும்படி அவரிடம் (தேவனிடம்) கேட்டுக்கொண்டார். ஒருவேளை அவர் (எரேமியா) மக்களுக்குத் தேவனுடைய கவனத்தைப் பெறுவது எப்படி என்று போதித்துக்கொண்டும் இருந்திருக்கலாம். தேவன் தம்மைக் கவனிக்கும்படிப் பல ஆண்டுகளாக அவர்களை எச்சரித்திருந்தார், ஆனால் அவர்கள் அவரது எச்சரிக்கைகளைக் கவனிக்கவில்லை. இப்போது அவர் மக்களின் கவனத்தை பெற்றிருந்தார், ஒருவேளை அவர்கள் திரும்பவும் அவரது கவனத்தைப் பெறக்கூடும்.

*உயிர்பிழைப்பதற்காகத் தங்களின் சொந்தக்குழந்தைகளையே உண்ணும்படி சோதிக்கப்பட்ட தாய்மார்களை நோக்கும்படித் தேவனுடைய கவனம் இழுக்கப்பட்டால், ஒருவேளை அவர் மனம் இரங்கி தமது நியாயத்தீர்ப்பை நிறுத்தி வைக்கலாம். மக்கள் கலகம் செய்வதினால், அவர்கள் தங்கள் சொந்த மகன்கள் மற்றும் மகள்களின் மாம்சத்தைப் புசிக்கும் அளவுக்கு விளைவுகள் ஏற்படும் என்று தேவன் நீண்ட காலத்திற்கு முன்பே அவர்களை எச்சரித்திருந்தார் (லேவி. 26:29). சீரியாவின் படைகள் சமாரியாவை முற்றுகையிட்டபோது அது நடந்திருந்தது (2 இரா. 6:24-29ஐக் காணவும்). அப்படிப்பட்ட ஒரு சீரழிவை நம்மால் கற்பனை செய்துகூட பார்க்க இயலாது!*

*தீர்க்கதரிசிகளும் ஆசாரியர்களும் தேவாலயத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் கொலைசெய்யப்படுவதைத் தேவன் கவனிக்க நேரிட்டால், அவர் தமது கரத்தை நிறுத்தி வைப்பார் என்று எரேமியா நினைத்தார். பரிசுத்த ஸ்தலம் என்பது பாதுகாப்பான இடமாக இருந்திருக்க வேண்டும். தேவனுடைய மக்கள் அவரது பிரசன்னத்தில் கூடிவரும் இடத்தில் இரத்தம் சிந்தப்படுதல் என்பது மோசம்போக்கப்பட்டதின் உச்சகட்ட நிலையாக இருந்தது.*

*கடைசியில் எரேமியா, தெருக்களில் மரித்து விழுந்துகிடந்த ஜனத்தின் இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் ஆகியோர் மீது தேவனுடைய கவனத்தைக் குவிக்க முயற்சிசெய்தார். ஒருவேளை அவர் (தேவன்) அதன் பின்பு தண்டனையை நிறுத்திவைத்து இரக்கத்தைக் காண்பிக்கலாம்.*

---

## *செய்தி என்ன?*

*துக்கப்படுதல் என்பது எப்போதுமே மோசமானதாக உள்ளதா? துக்கப்படுதலில் இருந்து நன்மை எதுவும் வரமுடியுமா? உங்கள் வாழ்வில் நேர்ந்த துக்கம் எதிலும், அவ்வேளையில் உங்களால் அதில் நன்மை எதையும் காண முடியாதிருப்பினும், பிற்பாடு அது உங்களுக்கு நன்மையைக் கொண்டு வந்தது என்ற வகையில் அதை நீங்கள் பின்னோக்கித் திரும்பிப் பார்க்க இயலுமா? துக்கம் என்பது திருப்பு முனையாக, இப்போதும் மற்றும் நித்தியத்திற்கும் நமது வாழ்வில் ஒரு நேர்மறையான மாறுபாட்டை ஏற்படுத்துகிறதாக, வாழ்வை மாற்றும் நிகழ்ச்சியாக அடையாளப்படுத்தப்பட முடியும்.*

*(1) துக்கமானது நம்மை முழங்கால் இடச்செய்யும்போது மாத்திரமே நன்மையானது விளைவாகத் தொடங்குகிறது. துக்கமானது நாம் முன்பு ஒருக்காலும் ஜெபித்திராத வகையில் ஜெபிக்கும்படி நமக்குக் கற்றுக்கொடுக்கிறபோது, நாம் மனிதரால் அறியப்பட்ட மாபெரும் வல்லமையின் ஆதார மூலத்தை நாடத் தொடங்குகின்றோம். ஜெபத்தில் நாம் பெருந்துன்பம் கொண்டிராத வரையிலும் நாம் ஜெபத்தின் ஆழமிக்க அளவை கற்றிருப்பதில்லை. பெருந்துன்பத்துடனான ஜெபமானது நம்மை, நமது அன்றாட வாழ்வில் மிகவும் சாதாரணமாக உள்ள "குழந்தைக்குரிய ஜெபங்களின்" பொதுமாதிரிக்கு அப்பால் நம்மை எடுத்துச் செல்லுகிறது. துன்புறுதல் நம்மை, ஜெபத்தில் முழங்கால் இடச்செய்தல் என்பது தேவனு*

டன் பேசுதலாகவோ அல்லது வாழ்வின் ஆசீர்வாதங்களுக்காக அவருக்கு நன்றி செலுத்துதலாகவோ மாத்திரம் இருக்கச் செய்வதில்லை, ஆனால் அது அவருடன் ஒரு ஆழமான செய்தித் தொடர்புக்குள் நம்மைப் பிரவேசிக்கச் செய்கிறது. இந்த மட்டத்தில் ஜெபிக்கும்போது நாம், தகுதியின்மையின் ஆழமான கருத்துணர்வானது விவரிக்க இயலாத நன்றியுணர்வுடன் ஒன்று கலந்த நிலையில் தேவனை அணுகுகின்றோம். கேட்பதற்கும் உதவுவதற்கும் தேவன் கொண்டுள்ள வல்லமையினிமித்தம் நாம் அவருக்கு முன்பாகப் பயபக்தியுடன் நிற்கின்றோம். அப்படிப்பட்ட ஜெபமானது மனஸ் தாபத்தில் இருதயத்தை ஊற்றுதலாக உள்ளது. இது ஆத்துமாவின் கசடு களைச் சுத்திகரிக்கிற துக்கத்தின் ஜெபமாக உள்ளது!

கொலை அல்லது கற்பழித்தல் போன்ற குற்றம் செய்த நபரின் குடும்பத் தார் மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் பேட்டிகாணப்படும்போது, பெரும்பாலும் அவர்கள், குற்றவாளியின்மீது தாங்கள் விரோதம் கொண்டி ருப்பதில்லை, ஆனால் அவனுக்காக இரக்கப்படுகின்றோம் என்று கூறுவதுபற்றி நான் திகைப்படைகின்றேன். பரிவிரக்கத்தின் இந்த உணர்வானது பெருந்துக்கத்துடனான அல்லது ஆத்துமாவை சுத்திகரிக்கிற ஜெபத்திற்குப் பின்புதான் வருகிறது.

(2) துக்கமானது நமது தவறுகளில் இருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ளக் காரணமாகிறபோது, நாம் வாழ்வின் மாபெரும் பாடத்தைத் திறந்து காண்கின்றோம். வில்லியம் E. பர்ட்டன் அவர்கள், Safed the Sage என்ற தமது புத்தகத்தில், ஒரு புகைவண்டியை அன்றாடம் துரத்திக் கொண்டிருந் தும் அதைப் பிடிக்காதிருந்த நாய் ஒன்றின் கதையைக் கூறினார். அந்த நாய் தினந்தோறும் தனது துரத்துதலின் முடிவில் ஒரு குழிக்குள் இடறி விழுந்து முடித்தது. ஒவ்வொரு வேளையிலும் அந்த நாய் குழியில் இருந்து எழுந்து நின்று தன்னை உலுக்கிக்கொண்டு, புகை வண்டியைப் பார்த்து உறுமுவதற்குச் சற்று நேரம் நின்றுவிட்டு, பின்பு வீடு திரும்பிற்று. அந்த நாயானது, சில மனிதர்கள் தங்கள் தவறுகளைத் தொடர்ந்து துரத்திப் பின்பு தங்கள் விழுந்துபோகுதல்களில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளாத நிலையைப் பிரதிபலித்தது.[1] துக்கம் என்பது நம்மை, மேல்நோக்கிப் பார்த்து, “இதிலிருந்து நான் கற்றுக்கொள்ள வேண்டியது என்ன?” என்று கேட்கும்படி போதிக்காவிட்டால், ஏன் என்பதை ஒருக்காலும் அறியாமலேயே வாழ்வில் அதே குழிகளுக்குள் நாம் இடறி விழுந்து கொண்டே இருப்போம்.

(3) கடைசியாக, துக்கம் என்பது நமது வாழ்வை நாம் பரிசோதனை செய்யவும் தேவனுடன் ஒன்றித்திருப்பதன் அவசியத்தை உணர்ந்தறியவும் காரணமாயிருந்தால் அது ‘‘நல்லதாகவே’’ உள்ளது. இழந்துபோகப் பட்டிருத்தல் என்பது தேவனிடத்தில் இருந்து பிரிந்திருத்தல் என்பது அர்த்தப்படுவது போலவே, இரட்சிக்கப்பட்டிருத்தல் என்பது தேவனுடன் ஒன்றித்திருத்தல் என்று அர்த்தப்படுகிறது. மக்களைத் தம்முடன் ஒன்றிக்கச் செய்தல் என்பதே பூமியில் தேவனுடைய செயல்பாட்டின் நோக்கமாக உள்ளது. நாம் அவரது இயல்பை மேற்கொண்டு, அவருடன் நடந்து நித்தியத் திற்கும் அவருடன் வாழ வேண்டும் என்று அவர் தீர்மானித்துள்ளார். இந்த முடிவை அவர் உலகத்தைப் படைப்பதற்கு முன்னதாகவே மேற்

கொண்டார் (எபே. 1:4). அவரது இந்த விருப்பமானது எபேசியர் 1:9, 12ல் பவுலினால் விளக்கியுரைக்கப்படுகிறது: "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக் கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டு மென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். மேலும் கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக் கும்படிக்கு, தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப் பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்துகொள்ளப் பட்டோம்."

நாம் நமது சொந்த அக்கிரமங்களினால் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுகின்றோம் (ஏசா. 59:1, 2). நாம் நல்ல மக்களாயிருந்து, ஒவ்வொருவரையும் இரக்கத்துடனும் மரியாதையுடனும் நடத்து பவர்களாயிருந்தும், சுத்திகரிப்பிற்குத் தேவன் மீது நம்பிக்கை வைப்பதைப் புறக்கணித்திருந்தால் இன்னமும் நாம் தேவனிடத்திலிருந்து பிரிக்கப் பட்டிருக்கப்படக் கூடும். தேவன், "ஒருவரும் கெட்டுப்போகாமல் (அவரிடம் இருந்து நித்தியத்திற்கும் பிரிந்திராமல்) எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி" இருக்கின்றார் (2 பேது. 3:9). அப். 4:12 வசனமானது, "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு (தேவனுடன் ஒன்றித்திருக்கும்படிக்கு) வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே யல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என்று நமக்கு நினைவூட்டுகிறது.

தேவன் உங்களைத் தமது குடும்பத்தில் ஏற்றுக்கொண்டு, உங்களைத் தமது பிள்ளையாக்கி, உங்களுக்குத் தமது வழித்தோன்றலின் உரிமைகளைக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகின்றார். அவர் நம் ஒவ்வொருவரையும் பாவத்தின் அழுக்கில் இருந்து எடுத்து, நம்மைச் சுத்திகரித்து, நம்மைத் தமது குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் சுவிகரித்துக்கொள்ள ஆயத்தமாய் இருக்கின்றனர். நாம் "கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால்" (கலா. 3:26) முழுமையான மகனுக்குரிய உரிமைகளுடன் இந்த சுவிகாரத் தைப் பெற்றுக்கொள்கின்றோம். இந்த விசுவாசமானது வரலாற்றுப்பூர்வ மான இயேசுவை வெறுமனே மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதைவிட மிகவும் மேலானதாக உள்ளது. வசனரீதியான விசுவாசம் கொண்டிருத்தல் என்பது அவரது பரிசுத்தத்தைப் பற்றிக் கொண்டு, அதற்கு நேர்மாறாக நாம் உண்மையில் எவ்வளவு அழுக்காக இருக்கின்றோம் என்பதையும் நமக்கு அவர் எவ்வளவு அதிகமாகத் தேவை என்பதையும் கண்ணோக்குதலாக உள்ளது. இது, நமது சுத்திகரிப்பின் ஒரே ஆதார மூலமாக அவரை ஏற்றுக் கொள்வதற்கான மனவிருப்பத்தை அர்த்தப்படுத்துகிறது. இது, அவர் ஒருவர் மாத்திரமே நமது பாவக்கடனைச் செலுத்தத் தகுதி வாய்ந்தவர் என்று ஒப்புக்கொள்ளுதலையும், அவரின்றி சுத்திகரிக்கப்படுவதற்கு நாம் வல்லமையற்றவர்களாக இருக்கின்றதையும் அர்த்தப்படுத்துகிறது.

*இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மறுசெயலாகத் தண்ணீரில் முழுக்காட்டப்படுதலின்மூலம் இயேசுவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிதல் என்பது இந்தச் செயல்முறையின் இன்னொரு பாகமாக உள்ளது (ரோம. 6:3-7).*

*''ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" (கலா. 3:27). இது நாம் அவரைத் தரித்துக்கொள்வதற்கு, அவருக்குள் பிரவேசிப்பதற்கு மற்றும் அவர் நமக்குள் பிரவேசிக்க அனுமதிப்பதற்கு தேவன் வடிவமைத்த செயல்முறையாக உள்ளது. இந்த செயல்முறையினால் நாம் அவருடன் ஒன்றிணைகின்றோம் (ரோம. 6:5). அப்போதுதான் நாம் "அப்பா! பிதாவே" என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை நமக்குள் அனுப்புகின்றார். "ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்.நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனுமாயிருக்கிறாய்" (கலா. 4:6, 7).*

---

*குறிப்பு*

[1]William E. Barton, *Safed the Sage* (Atlanta: John Knox Books, 1965), 9.

## *துன்பம் என்ற போதகர்*

*ஒரு மைல் தூரம் நான் இன்பத்துடன் நடந்தேன்;*
*வழிநெடுகிலும் அது கதைத்தது;*
*அது கூறவேண்டியிருந்த எதுவும்*
*என்னை ஞானவானாக்கவில்லை.*
*ஒரு மைல் தூரம் நான் துன்பத்துடன் நடந்தேன்,*
*அது என்னிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை;*
*ஆனால்,ஓ! துன்பம் என்னுடன் நடந்தபோது*
*நான் கற்ற பாடங்கள்தான் எத்தனை! எத்தனை!*

*இராபர்ட் ஹாமில்ட்டன்*